**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.92/2022**
Prosecution: **PW5**

Deposition of the witness of **LW6**

| Name | திரு.தீபிகா | District | இராணிப்பேட்டை |
|---|---|---|---|
| Husband/ Father Name | திரு.ரகுவரன் | Occupation | இல்லத்தரசி |
| Village /Area | சர்வந்தாங்கல் | Age | 26 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 6057 2947 6647 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **05.03.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள சர்வந்தாங்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அவர்களை நான் இதற்கு முன்பு பார்த்ததில்லை. அ.சா.1 ரகுவரன் என் கணவர் ஆவார். இந்த வழக்கில் இறந்து போன நாகேந்திரன் என் ஊரை சேர்ந்தவர். 4 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊரில் உள்ள அம்மன் கோவில் திருவிழாவின் போது இரவில் நான் வீட்டில் இருந்த போது சண்டை நடந்ததாக நான் கேள்விப்பட்டேன். அந்த சண்டை யார் யாருக்கிடையில் நடந்தது என்பதும், அதில் யாருக்கு யாரால் என்ன காயம் ஏற்பட்டது என்பதும் எனக்கு தெரியாது. அந்த கோவில் திருவிழாவில் தகராறு நடந்ததால் என் கணவரை என் மாமனார் அங்கிருந்து அழைத்து வந்து வீட்டிற்குள் இருக்க சொல்லி கதவை பூட்டியதால் என் கணவர் கண்ணாடி ஜன்னலை கோபத்தில் குத்தியதால் என் கணவருக்கு இடதுகை மணிக்கட்டு அருகே காயம் ஏற்பட்டது. என் கணவரை சிகிச்சைக்காக இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனையில் நாங்கள் சேர்த்தோம். என் கணவரை மருத்துமவனையில் சிகிச்சைக்கு சேர்த்த போது எங்கள் ஊரை சேர்ந்த நாகேந்திரன் என்பவருக்கும் காயம் ஏற்பட்டதாகவும், அவரை அதே மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு வந்துள்ளதாகவும் நான் கேள்விப்பட்டேன். அவருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் அவர் எப்படி இறந்தார் என்றும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு, சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது 27.07.2021-ம் தேதி நடைபெற்ற திருவிழாவின் போது இரவு 8.00 மணிக்கு சாமி ஊர்வலம் நடந்ததாகவும், அந்த ஊர்வலத்தில் நானும், என் குடும்பத்தினரும் மற்றும் ஊர்க்காரர்களும் கலந்துகொண்டு நடந்து வந்ததாகவும், அப்போது எங்கள் ஊரை சேர்ந்த கிரிவாசனுடன் இருந்த 4 நபர்கள் சாமி ஊர்வலத்தில் நடனம் ஆடியதால் என் கணவரும் எங்கள் ஊரை சேர்ந்த நாகேந்திரன் என்பவரும் அவர்கள் பார்த்து நடனம் ஆட கூடாது என்று சொன்னதாகவும், அதற்கு அந்த நபர்கள் நடனம் ஆடுவதை நிறுத்திவிட்டதாகவும், அதன் பிறகு கிரிவாசன் என் கணவரிடம் நீங்கள் என்னடா செல்வது போங்கடா என்று சொன்ன போது ஊர்க்காரர்கள் கிரிவாசனிடம் வெளியாட்கள் நடனம் ஆட கூடாது என்று சொல்லிவிட்டு வந்ததாகவும், அன்று இரவு 9.00 மணிக்கு சாமி ஊர்வலம் பேருந்து நிறுத்ததிடம் சென்ற போது கிரிவாசன் அவருடைய நண்பர்கள் அரிஷ், ஹேமபிரசாத், அன்பரசன், கார்த்தி ஆகியோர் என் கணவரிடம் எங்களையாட நடனம் ஆடக் கூடாது என சொல்கிறீர்கள் என்று சொன்ன போது என் கணவரும், நாகேந்திரனும் பேருந்து நிலையம் உள்ளே சென்றதாகவும், அப்போது கிரிவாசன் என் கணவரை பார்த்து இவன் உயிரோடு இருக்க கூடாது ஊர்க்காரர்கள் முன்னாடி என் மானத்தை வாங்கிவிட்டான் இவனை போட்டு தள்ளுங்கடா என்று சொன்னவுடன் ஹேமபிரசாத் என்பவர் தீடீரென பேருந்து நிலையத்திலுள்ள நிழற்குடை உள்ளே இருந்த பிராந்தி பாட்டிலை உடைத்து என் கணவனை குத்த வந்த போது நாங்கள் தடுக்க போனதாகவும், அப்போது ஹேமபிரசாத் அவர் கையில் வைத்திருந்த உடைந்த பிராந்தி பாட்டிலால் நாகேந்திரனின் கழுத்தில் ஓங்கி குத்தியதாகவும், கிரிவாசன் அவனையும் குத்துங்கடா என்று என் கணவரை பார்த்து சொன்னவுடன் கார்த்தி என்பவர் அங்கிருந்த வேறு பிராந்தி பாட்டிலை உடைத்து என் கணவரின் கையில் குத்தியதால் இடது கை மணிக்கட்டில் ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், என் கணவரை இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாகவும், அதே நேரத்தில் காயம்பட்ட நாகேந்திரனையும் எஸ்.எம்.எஸ் மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாகவும், நாகேந்திரன் இறந்துவிட்டதாக அங்கு பரிசோதித்த மருத்துவர் கூறியதாகவும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.